சந்தையின் அளவு போன்றவை தொடர்பாக நிறுவனத்தில் கொள்கை வகுப்போருக்கு வழிகாட்டுவதற்கானதொரு அத்தகைய சேவை; வர்த்தக கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கங்கள், உணவு ஆணையாளர் திணைக்களம், தனியார்துறை ஆகியவற்றின் தொழிற்பாட்டின் திறமையை முன்னேற்ற உதவியாக இருக்கும்.

**சுற்றுலாத்துறை**

சுற்றுலாத்துறையானது சென்ற பத்து ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டுள்ள போக்கினைத் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டிலும் வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதிலும், தொழில் வாய்ப்பினை உருவாக்குவதிலும் தொடர்ந்தும் முக்கியமானதொரு மூலமாக விளங்கிவருகின்றது.

1981 ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சுற்றுலாப் பயணத்தர்களின் வருகைகள் 370,742 ஆக அமைந்து, 1980 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள எண்ணிக்கையைவிட 15 சதவீத அதிகரிப்பைக் காட்டின. ஆயினும், சென்ற ஐந்து ஆண்டுகளின் செயலாற்றத்துடன் ஒப்புநோக்குகையில் 1981இல் அவதானிக்கப்பட்டுள்ள சுற்றுலாப் போக்குவரத்தின் வளர்ச்சி வீதத்தில் குறிப்பிடத்தக்கதோர் வீழ்ச்சி ஏற்பட்டது. 1981 ஆம் ஆண்டில் வருகைதந்த இன்பப்பயணிகளின் (அதாவது நாட்டில் 24 மணித்தியாலங்களுக்குக் குறைவாகத் தங்கும் தற்காலிக வருகையாளர்களையும் கடற்சுற்றுலாப் பயணிகளையும் உள்ளடக்கி ஆனால் இடைப்போக்கிலுள்ள பயணத்தர்களை நீக்கி) எண்ணிக்கை 7,737 ஆக விளங்கி, சென்ற ஆண்டு அளவிலும் 10 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

சுற்றுலாப் போக்குவரத்தின் அளவினை மதிப்பிடும் சிறந்த அளவு கோலாக அமையும் சுற்றுலாப் பயணத்தர்கள் தங்கும் இரவுகளின் எண்ணிக்கை 1981 இல் 40 இலட்சமாக அமைந்து 13 சதவீத ஆண்டு வளர்ச்சி வீதத்தைக் காட்டுகின்றது. மீளாய்விற்குரிய ஆண்டில் சுற்றுலாப்பயணத்தர்கள் தங்கிய இரவுகளின் வளர்ச்சி வீதம் சென்ற ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் பெறப்பட்ட தொடர்பான வீதங்களைவிடக் குறைவுற்று விளங்கியதுபோல் தோன்றுகின்றது. இதன் விளைவாக ஒரு சுற்றுலாப்பயணி தங்கும்காலப்பகுதியின் சராசரி அளவும் 1980 இல் 11.0 இலிருந்து 1981 இல் 10.8ஆகக்குறைந்தது.

சுற்றுலாப் பயணிகள் நாட்டில் தங்குவதற்கான வசதி, உணவு, போக்குவரத்து பல்வேறு விடயங்களின் கொள்வனவு, பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்ற செலவுகளை உள்ளடக்கும். சுற்றுலாவிலிருந்து பெறப்படும் மொத்த வருவாய்கள் மீளாய்விற்குரிய ஆண்டில் * ரூ. 25,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு வருவாய்களின் அளவைவிட 36 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. சுற்றுலாமூலம் பெறப்பட்ட மொத்த வருவாய்கள் ஐக்கிய அமெரிக்கடொலர்களில் 1,300 இலட்சமாக விளங்கி 17 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. சிஎஉ நியதிகளில் இவை 30 சதவீத அதிகரிப்பைக் காட்டி 1980 இல் 850 இலட்சத்திலிருந்து 1981 இல் 1,100 இலட்சமாக உயர்வுற்றன.

கடந்த காலத்தைப் போலவே மேற்கத்திய ஐரோப்பாவே தொடர்ந்து 1981 இலும் முக்கிய சந்தையாக அமைந்து மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 66 சதவீதத்திற்கு வகை கூறியது. இரண்டாவது ஆகப்பெரிய சந்தையாகிய ஆசிய சந்தை மொத்த வருவாய்களில் 24 சதவீதம் கொண்ட பங்கினை வைத்திருந்து சென்ற ஆண்டின் தனது பங்குடன் ஒப்பிடுகையில் 2 சதவீத அதிகரிப்பைக்காட்டுகின்றது. வட அமெரிக்காவின் சந்தைப் பங்கு 1981இல் 4சதவீதமாக விளங்கியது.

---

* சுற்றுலாச் சபையினால் மதிப்பிடப்பட்டவாறு

1981இல் இந் நாட்டிற்கு வருகை தந்தவர்களின் முக்கிய நோக்கு தொடர்ந்தும் ''களியாட்டம்'' ஆகவே இருந்தது. ஏனெனில் இக்காரணத்தையே 331,638 சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தந்தமையின் நோக்காகக் குறிப்பிட்டுள்ளார்கள். 1981 இல் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் களியாட்டத்திற்காக வருகைதந்த சுற்றுலா பயணிகளின் தொடர்பான பங்கு 90சதவீதமாகவிருக்கையில் வியாபார நோக்கத்திற்கான வருகையின் விகிதம் 4சதவீதமாக விளங்கியது, 1981 இல் களியாட்டத்தை நாடி வருகை தந்தவர்களின் வளர்ச்சிவீதம் 14 சதவீதமாக அமைந்து இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த சுற்றுலாப்பயணிகள் தங்கும் இரவுகளின் வளர்ச்சி வீதத்துடன் இணங்கியிருக்கும் அதே வேளையில் தொழில் நோக்கங்களுக்காக வருகை தந்தவர்களில் 22சத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையையும் அவதானிக்கவியலுமாயிருக்கின்றது.

அட்டவணை 1.28

**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1980 - 1981**

| விடயம் | 1980 | % மாற்றம் 1979 மேல் | 1981 | % மாற்றம் 1980 மேல் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் .. | 321,780 | 28.6 | 370,742 | 15.2 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் ... | 8,636 | 55.2 | 7,737 | -10.4 |
| 3. பயணி இரவுகள் ('000) ... | 3,548 | 27.7 | 4,000* | 12.7 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூ. பத்து இலட்சங்களில் ... | 1,830.3 | 51.3 | 2,500.0* | 36.6 |
| 4.2 ஐ. அ. டொலர் பத்து இலட்சங்களில் ... | 110.7 | 42.5 | 129.9 | 17.3 |
| 4.3 சி. எ. உ. பத்து இலட்சங்களில் ... | 85.1 | 41.6 | 110.3 | 29.6 |
| 5. நோக்கங்களின்படியான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 291,996 | 28.5 | 331,638 | 13.6 |
| 5.2 தொழில் சம்பந்தமானவை ... | 19,332 | 43.6 | 23,540 | 21.8 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 215,650 | 32.1 | 245,190 | 13.7 |
| 6.2 ஆசியா ... | 72,022 | 28.2 | 87,894 | 22.0 |
| 6.3 வட அமெரிக்கா ... | 15,408 | 10.5 | 16,554 | 7.4 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 47,900 | 10.3 | 52,820* | 10.2 |
| 7.1 நேரடியாக ... | 19,878 | 7.6 | 22,000* | 10.7 |
| 7.2 மறைமுகமாக ... | 28 022 | 12.4 | 30,800* | 9.9 |

* மதிப்பீடுகள் | மூலம்: இலங்கைச் சுற்றுலா சபை

சென்மதி நிலுவைத் தரவுகள் சுற்றுலா மூலம் பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. 1975 ஆம் ஆண்டில் பணிகள் மூலம் பெறப்பட்ட பெறுகைகளில் 22 சதவீதமாக விளங்கிய சுற்றுலா வருவாய்கள் 1980 இல் 35சத வீதமாகவும், 1981 இல் 39 வீதமாக மேலும் உயர்வுற்றன. ஆயினும் சென்ற ஆண்டில் நான்காவது நிலையிலிருந்து ஆகக் கூடிய வெளிநாட்டுச் செலாவணியை உழைத்த சுற்றுலாத்துறை 1981 இல் ஐந்தாவது இடத்திற்கு மாற்றமுற்றது.

*1981*இல் சுற்றுலாத்துறையானது *52,800* கொண்ட மொத்தத் தொழில் வாய்ப்புக்களை வழங்கியதனுல் தொழில் வாய்ப்பினை வழங்கவேண்டும் என்ற அரசின் முயற்சிகளுக்குச் சாதகமான முறையில் உதவியுள்ளது. இது சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட தொகையைவிட *10* சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. சுற்றுலாத் துறையில் உருவாக்கப்பட்ட மொத்த தொழில் வாய்ப்புக்களில் நேரடியான தொழில் வாய்ப்பு *22,000* ஆகவிருக்கையில் மறைமுகமான தொழில் வாய்ப்பு *30,800* ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் *1981* இல் நேரடியான தொழிலுக்கான வாய்ப்புகள் கூடிய வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளனபோல் தோன்றுகின்றது.

## சென்மதி நிலுவை

*1981* இன் சென்மதி நிலுவை நிலைமைகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டின. இம்முன்னேற்றத்திற்கு பொருத்தமான கேள்வி முகாமை, நெகிழத்தக்க செலாவணிவீத கொள்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டமையும் ஓரளவு காரணமாகும். செலாவணிவீதங்களின் அசைவுகள், அரசதுறையின் செலவின் விரிவில் கட்டுப்பாடு, கட்டுப்பாடான நாணயக்கொள்கைகள் ஆகிய அனைத்தும் இவ்வாண்டுப் பகுதியில் இறக்குமதிப் பாய்ச்சலில் ஏற்பட்ட அதிகரிப்புச் வீதத்தைக் குறைப்பதற்கு உதவின. இது, ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சேர்ந்து முகாமைப் படுத்தத்தக்க மட்டங்களுள் வர்த்தகக்குறை அடங்குவதற்கு உதவின. குறுகியவர்த்தகக்குறை நிலவிய வேளையில் நடைமுறைக்கணக்கு மாற்றல்கள் தொடர்பாக பெருமளவு உள்வருகை ஏற்பட்டமை 1980 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைக் கணக்கு குறையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மறுபுறத்தில் இவ்வாண்டுக்காலத்தில் வெளிநாட்டு கடன்கள் நேரடி முதலீடு, குறுங்காலக் கடன்பாடுகள் வடிவிலான பெருமளவு மூலதன உள்பாய்ச்சல்கள் இருந்ததன் விளைவாக, முன்னைய ஆண்டில் நிலவிய கணிசமான பற்றுக்குறைக்கு மாறாக 1981 இல் சென்மதிப் பற்றுக்குறையை மிகக் குறைந்த அளவில் அமைய உதவியது. ஆகவே முழுமையான சென்மதிக்குறைக்கு நிதியிடுவதற்கான தேறிய வெளிநாட்டு ஒதுக்குகளின் பயன்பாடு 1981 இல் மிகவும் குறைந்து காணப்பட்டது.

1981 இல் முழுமையான சென்மதி நிலுவையின் தோற்றம் ஓரளவிற்குத் திருப்திகரமாக இருந்தபோதும் அதில் சில பாதகமான போக்குகள் காணப்பட்டன. 1977 நவெம்பரிலிருந்தும் செயற்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் குறுங்காலத்தில் தொடர்ந்தும் நடைமுறைக் கணக்குக் குறையைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுடன் சேர்ந்து தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைகள் தொடக்க ஆண்டுகளில் உயர்ந்த மட்டங்களில் இறக்குமதிப் பாய்ச்சல்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. மறுபுறத்தில் ஏற்றுமதித்துறை பெருமளவில் பன்முகப்படுத்தப்பட்டு வளர்ச்சியைக் காட்டுமென எதிர்பார்க்கப்பட்டது. தொடக்க ஆண்டுகளில் தோன்றிய சென்மதி நிலுவைப் பற்றுக்குறைகள், தனியார் மூலதனம், அலுவல்சார் மூலதனம், பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான வசதிகள் போன்ற மூலங்களிலிருந்து நிதியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.